பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 11 திங்கட்கிழமை 28.10.2024 கதிர் 351

## இனி இது ரகசியம் அல்ல!

புலம்பெயர் தமிழ் முதலாளி ஒருவர் தமிழ்த் தலைமைகளைப் பணம்கொடுத்துவாங்கும்முயற்சியில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளைப் பணம் ☞ 2

# 3 வாரங்களுக்குக்கூட தாங்காது அநுரகுமாரவின் ஆளும் தரப்பு

## முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

தேசிய மக்கள் முன்னணியினர் நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்தியிருக்கும் வேட்பாளர்களைப் பார்த்தால் ஜனாதிபதி அநுரகுமாரவின் ஆளும்தரப்பு 3 மாதம் அல்ல, மூன்று வாரங்கள்கூட இருக்கும் என நான் நினைக்கவில்லை. அதனால் அனுபவமுள்ளவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கம்பஹா மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு ஐக்கிய தேசிய கட்சியும் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுமே நடவடிக்கை எடுத்திருந்தன. ஆனால் தற்போது இந்த தேர்தலில் யானை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு தெரிவிக்க நான் வரவில்லை.

நாடு வீழ்ச்சியடைந்தபோது நாட்டை பொறுப்பேற்க யாரும் இருக்கவில்லை. பிரதமர் பதவியை ஏற்பதற்கும் யாரும் இருக்கவில்லை. அப்போது ஒருநாள் ☞ 2

### தமிழ் அரசியல் தலைவர்கள்

## அநுரவைச் சந்தித்தாலும் அமைச்சுப் பதவி கிட்டாது

### பிமல் ரத்நாயக்க திட்டவட்டம்

அநுர ஜனாதிபதியானதுமே டக்ளஸ் தேவானந்தா, சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் அவரைச் சந்தித்து வருகிறார்கள். இதிலிருந்தே அவர்கள் எவ்வளவு அரசியல் வங்குரோத்து அடைந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அப்படி, ☞ 8

## வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்

நாடாளுமன்றத் தேர்தல் வாக்காளர் அட்டை விநியோகம் நேற்று முதல் தொடங்கியதாக தபால் ☞ 2

## முஸ்லிம்களை வெளியேற்ற அரச பயங்கரவாதம் தீவிரம்

### ஹிஸ்புல்லா தெரிவிப்பு

முஸ்லிம்களை இந்த மண்ணிலிருந்து வெளியேற்ற அரச நிர்வாகப் பயங்கரவாதம் தீவிரமாகச் செயற்படுகின்றது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ☞ 2 பிரதித் தலைவரும் மட்டக்களப்பு

## தமிழர்களின் ஒரு போராட்டத்திலாவது ஜேவிபி கலந்துகொண்டிருக்கின்றதா?

### கஜேந்திரகுமார் கேள்வி

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் நடத்திய, நடத்திவரும் போராட்டங்களில் ஒன்றிலாவது ஜேவிபியோ தேசிய மக்கள் சக்தியோ எப்போதாவது கலந்துகொண்டிருக்கிறதா என்று கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்தேசியமக்கள்முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் அறிமுகம் மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று ☞ 2

## முஸ்லிம்களை கோபமூட்டும் வகையில் இஸ்ரேலியச் சுற்றுலாவிகள் நடந்தனர்

### வேட்பாளர் புபுது ஜெகொட புதிய தகவல்

இஸ்ரேலியர்கள் மீது இலங்கையில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையில் கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களைக் கோபமூட்டும் வகையில் இஸ்ரேலிய சுற்றுலாவிகள் நடந்துகொண்டனர் என்று மக்கள் போராட்ட அமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் புபுது ஜெகொட தெரிவித்தார்.

இலங்கையில் இருக்கும் இஸ்ரேலிய சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல் இடம்பெறும் அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்க தூதரகத்தினால் விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கை தொடர்பில் தொலைக்காட்சி நிகழ்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து ☞ 7

## அறுகம்பே தாக்குதல் சூத்திரதாரிகள் போதைப் பொருள் கடத்தல்காரர்கள்

### புலனாய்வு அமைப்புக்கள் தெரிவிப்பு

அறுகம்பே பகுதியில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட சம்பவத்தின் மூளையாக செயற்பட்டவர் கொழும்பு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என பயங்கரவாத புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதல் திட்டப்படி, இஸ்ரேலியர்கள் அதிகம் நடமாடும் இடங்களுக்குச் சென்று அவர்களைக் கத்தியால் குத்திக்காயம் ஏற்படுத்தும் திட்டமே இருந்துள்ளதாகவும் இந்தத் திட்டத்தின் பின்னணியில் உள்ள அனைவரும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் எனவும் பொலிஸ் மற்றும் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. லெபனான் மற்றும் பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல் மற்றும் காசா பகுதியை அழித்தது மற்றும் ஹிஸ்புல்லாவின் தலைவரின் படுகொலை ஆகியவை இந்தத் தாக்குதலைத் திட்டமிடுவதற்கான முக்கிய காரணம். எனினும், இந்த நாட்டுக்கு வருகை தரும் இஸ்ரேலியர்களுக்கு தெரியாமல் உளவுத்துறையினர் அவர்களை பின்தொடர்ந்து செல்ல முடிவு செய்துள்ளனர் என தெரிய வருகிறது.



## நாட்டை ஆளும் திறமை அநுர தரப்புக்கு இல்லை

### தேங்காய்க்கு கூட வரிசை எனக் கண்டிக்கிறார் சஜித்

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான ஆளும் தரப்புக்கு ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்குத் தேவையான திறமையும் ஆற்றலும் இல்லை என்பதை நிரூபித்துள்ளனர். ஜனாதிபதி தேர்தலின்போது கூறியது போல் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த அவர்களால் முடியாது போயுள்ளது. தேங்காயை வாங்குவதற்குக்கூட வரிசையில் நிற்கும் யுகத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தெஹிவலை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் வருமானக் குறைவாலும், பொருட்களின் விலை ஏற்றத்தாலும் தமது பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத இலட்சக்கணக்கான குடும்பங்கள் காணப்படுகின்றன.

ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, தாய் சேய் ஆரோக்கியம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. மக்களை வாழவைப்பதற்கான தீர்வுகள் இந்த ☞ 2

### வாக்களிப்புத் தினம் குறித்து

## தேர்தல் ஆணைக்குழுவிடம் அறிக்கை கேட்கிறது சட்டமா அதிபர் திணைக்களம்

பொதுத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்திலிருந்தான அவதானிப்பு அறிக்கையை வழங்குமாறு தேர்தல்கள் ☞ 7

## தேமசக் கட்சி செல்வாக்கு அதிகரிக்கவேயில்லை

### எல்பிட்டிய தேர்தல் உதாரணம் என்கிறார் ரிஷாத்

தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு அதிகரிக்கவில்லை; நாளாந்தம் வீழ்ச்சியடைகிறது, எல்பிட்டிய தேர்தல் அதற்கொரு நல்ல உதாரணம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின், நாடாளுமன்ற வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ☞ 2

### தேசிய மக்கள் சக்தி தொழிற்சங்கம் வலியுறுத்தியபடி

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 2000 சம்பள அதிகரிப்பை தருக

### ஜீவன் தொண்டமான் வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கமானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது. எனவே, சம்பள நிர்ணய சபையைக்கூட்டி அதற்குரிய யோசனையை ஆளும்தரப்-பு முன்வைக்க வேண்டும். அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆட்சியில் ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொடுத்து வாங்கி, அதன் மூலம் தனது நலன்களைப் பேணக்கூடியவர்களைக் களத்தில் இறக்க இந்தத் தேர்தலில் முயன்றுகொண்டிருக்கிறார் என்பது எனது வாசகர்களுக்குப் பழைய செய்திதான். அவர் மொத்தம் மூன்று கட்சிகளை வாங்கி வைத்துள்ளார் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

அதில் ஒன்றை தெற்கில் நடிகர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு களத்தில் இறக்கியிருக்கிறார். வடக்கு கிழக்கிலும் தான் வாங்கி வைத்திருக்கும் கட்சியின் கீழ் தமிழ் அரசியல்வாதிகளைப் போட்டியிட வைக்க முயன்றார். அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. அதனால் இப்போது மற்றக் கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களில்சிலருக்குக்கோடிகோடியாகப் பணத்தையும்கொடுத்து தனது ஊடகங்களில் 'பப்ளிசிட்டி'யும் கொடுத்து தனக்கு வாய்த்த அடிமைகளாக நாடாளுமன்றம் அனுப்பும் பகீரத முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இன்று உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போவது அது பற்றிய செய்தியல்ல. இந்தப் புலம்பெயர் தமிழ் பெரு முதலாளி எல்லாவற்றையும் காசால் வாங்கிவிட முடியும் என்று நினைத்து, தெற்கில் தனது கட்சியின் முதல் மாநாட்டை கொழும்பில் நடத்தி சூடு கண்ட விடயம் பற்றித்தான் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன். அந்த அந்தக் கட்சியின் முதல் மாநாடு நேற்று நடந்தது. நாடாளுமன்றத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர்தான் முதல் மாநாடே நடத்தப்படுகிறது. சிறைத் தண்டனைபெற்றஅவரதுகட்சியின்முதன்மை வேட்பாளருக்கு தேர்தலில் போட்டியிடும் உரிமையே இல்லை என்று தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்பது தனிக் கதை. நேற்றைய மாநாடு கொழும்பில் உள்ள முக்கிய விளையாட்டு மைதானம் ஒன்றில் இடம்பெற்றது.

கூட்டம் முடிந்ததுமே அங்கு பெரிய குழப்பம் களேபரம். கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞர்களில் பெரும் எண்ணிக்கையானோரே குழப்பத்தில் ஈடுபட்டிருந்தனர்.பொலிஸார்தலையிட்டுத்தான் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்ப வேண்டியிருந்தது.

குழப்பத்திற்குக் காரணம் கூட்டத்திற்கு வந்தால் கொடுப்பதாகக் கூறிய பணத்தை கட்சி ஏற்பாட்டாளர்கள் கொடுக்கவில்லை என்பதுதானாம். பேசியபடி தமக்கான பணத்தைத்தரும்படிகேட்டுநூற்றுக்கணக்கான இளைஞர்கள் வீதியோரம் நின்று திடீரென்று கூக்குரல்எழுப்பத்தொடங்கிவிட்டனர். அதனால் அந்தஇடமேபெரும்பதற்றத்துக்குள்ளாகிவிட்டது என்கிறார்கள் பார்த்தவர்கள்.

ஆளுக்கு 2 ஆயிரம் ரூபாய் தருவதாகக் கூறித்தான் அழைத்து வந்தார்களாம். சொன்னபடி பணத்தைக் கொடுக்கவும் செய்திருக்கிறார்கள். ஆனால், கொண்டுவந்த பணம் முடிந்து விட்டது என்று கூறி கட்சி நிர்வாகிகள் இடையில் கைவிரித்துவிட, கடுப்பாகிப்போன பணம் கிடைக்காத இளைஞர்கள் வீதியோரம் நின்று நீதி கேட்டுப் போராடத் தொடங்கிவிட்டார்கள்.

பிறகு பொலிஸார் தலையிட்டு கட்சி நிர்வாகிகளை அந்தக் கும்பலிடமிருந்து மீட்டெடுத்துத் தப்பிப் போக விட்டுள்ளார்கள். போக்குவரத்துஉணவுச்செலவுக்குஎன்றுதான் பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் அந்தப் பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றியதில் தமது ஊர்களுக்குத் திரும்ப வழியின்றி நின்றிருந்த அந்த இளைஞர், யுவதிகளை பொலிஸார்தான் தனியார் மற்றும் அரச பேருந்துகளை மறித்து நிலமையை விளக்கி இலவசமாக ஏற்றி அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

கன்னிக் கூட்டமே கடைசியில் கடன்கூட்டமாக முடிந்திருக்கின்றது. நல்லவேளை, வடக்கு கிழக்கில் தமிழ்த் தலைவர்களில் சிலராவது புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதில் எமது இளைஞர்களும் இப்படி வீதியில் நின்று காசுக்காகப் போராட்டம் நடத்தாமல் தப்பிக்கொண்டார்கள்.

ஆனாலும் பறவாயில்லை, அந்தத் தமிழ் புலம்பெயர் பெரு முதலாளியிடம் 3 கோடி ரூபாய் பணம் வாங்கியவர் நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் கொடுத்து யாழ்ப்பாணத்தில் தேர்தல் பணிகளுக்கு ஆள்திரட்டிவரும் நிலையில் கொழும்பில் 2ஆயிரம் ரூபாய்க்கு ஆள்பிடித்தது இலாபம்தான் போலும்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 3 வாரங்களுக்குக்கூட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிமல்லான்சா என்னை அழைத்து பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள யாரும் இல்லை, அதனால் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள முடியுமா எனக் கேட்டார். அதன் பிரகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைச் சந்திக்கச் சென்று, நான் அந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். சிலநாட்களுக்கு பின்னர் ஜனாதிபதியும் சென்றுவிட்டார்.

பின்னர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவில் என்னை வேட்பாளராக இருக்குமாறு பெரும்பான்மையானவர்கள் கேட்டுக்கொண்டனர். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில்பெரும்பான்மையானவர்களை ஒன்றிணைத்துக்கொண்டு ஆளும்தரப்பை அமைத்தேன்.

நாங்கள் இன்று வங்குரோத்து நிலையில் இருந்துவிடுபட்டிருக்கிறோம். அதனைச்செய்ய முடியும் என யாரும் நினைக்கவில்லை. எமது நாடு வீழ்ச்சியடைய இடமளிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டோம். சிலிண்டர் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுக்கின்ற அனைவரும் அனுபமுள்ளவர்கள். ஆனால் கம்பஹாவில் திசை காட்டியில் போட்டியிடுகின்றவர்கள் யார் என்பதுகூட உங்களுக்கு தெரியுமா? காலநிலை மாற்றம் தொடர்பில் தெரிந்த வேட்பாளர் ஒருவரை களமிறக்கி இருப்பது நாங்கள் மாத்திரமே!

ருவன்விஜேவர்த்தனஎனதுஆலாசேகராகச் செயற்பட்டுள்ளார். சர்வதேச மாநாடுகளிலும் கலந்துகொண்ட ஒருவர். அவ்வாறான ஒருவர் திசைகாட்டியில் இருக்கிறாரா? அதேபோன்று நளின் பெர்னாண்டோ அமைச்சராக இருக்கும்போது தேங்காய்க்கு வரிசை இருக்கவில்லை. லசந்த அழகியவன்ன நெடுஞ்சாலை போக்குவரத்து தொடர்பில் தெரிந்த ஒருவர். அதனால் சிலிண்டருக்கு வாக்களித்து அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும்.

அநுரகுமார திஸாநாயக்க 3 மாதமே இருப்பார் என மக்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவர் ஜனாதிபதியாக தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்றே நான் தெரிவிக்கிறேன். அவரின் கட்சியால் அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்று வந்தால் அது எனக்கு தெரியாது. அவ்வாறன விடயங்களை செய்யவேண்டியதில்லை. ஆனால் அவர்கள் முன்வைத்திருக்கும் வேட்புமனுவை பார்த்தால், அவரின் ஆளும்தரப்பு 3 மாதம் அல்ல, மூன்று வாரங்கள் கூட இருக்கும் என நான் நினைக்கவில்லை. அதனால் அனுபவமுள்ளவர்களுக்கு வாக்களிக்கவேண்டும்.

அனுபவமுள்ளவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தால் ஜனாதிபதியால் 3 வருடங்களுக்காவதுநாட்டைக்கொண்டுசெல்லமுடியும். அவ்வாறு இல்லாவிட்டால் தேங்காய் வரிசை மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும் வரிசை இருக்கும்.

தேர்தலில் தோல்வியடைந்தால் வீட்டில் இருக்குமாறு அநுரகுமார திஸாநாயக்க எனக்கு தெரிவித்திருக்கிறார். நான் அதனை ஏற்றுக்கொள்கிறேன். நான்ஜனாதிபதிதேர்தலில் போட்டியிட்டேன். பெரும்பான்மையானவர்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. அதனால் நான் தோல்வியடைந்தேன். ஆனால் அவருக்கும் பெரும்பான்மையானவர்கள் வாக்களிக்கவில்லை.

51 சதவீதம் கிடைக்கவில்லை. அப்படியானால் அவருக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நான் பெரும்பான்மை இல்லாத முன்னாள் ஜனாதிபதி. அவர் பெரும்பான்மை இல்லாத ஜனாதிபதி. அதனால் நாங்கள் இருவரும் ஒன்றாகவே இருக்கிறோம்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு பெரும் போராட்டம் இடம்பெற்றது. தேசிய மக்கள் சக்தியினால் பணிபுறக்கணிப்புக்களும் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கி இருந்தேன். பின்னர் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் உதய செனவிரத்ன குழு அறிக்கையின் பிரகாரம் இரண்டு கட்டங்களாக சம்பள அதிகரிப்பு வழங்க திறைசேரி இணக்கம் தெரிவித்தது.

2025ஆம் ஆண்டு செலவழிக்கும் நிதி தொடர்பில் நாணய நிதியத்தின் குழுவுக்கு அறிவிக்க வேண்டி இருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நூற்றுக்கு 13 சதவீதம்வரை எமது செலவு வரையறுக்கப்பட்டது. நாங்கள் செலவிடும் அனைத்துச் செலவுகள் தொடர்பாகவும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

அதன் பிரகாரம் நாங்கள் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பையும் செலவுப் பட்டியலில் உள்வாங்கி இருந்தோம். அதனாலே அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கவேண்டிஏற்பட்டது. செலவுவரையறை என்ன என்பதை நாணய நிதியத்துக்கு காட்டவேண்டி இருக்கிறது. ஆனால் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்புக்கு நான் நிதி ஒதுக்கி இருக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நிதி ஒதுக்குவது 2025 ஒதுக்கீட்டு சட்டமூலத்திலாகும். 2024 ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் 2025ஆம் ஆண்டுக்கான நிதியை ஒதுக்க முடியாது. அது தெரியாதா? 2024 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் நான் பத்தாயிரும் ரூபா சம்பள அதிகரிப்புக்காக நிதி ஒதுக்கினேன்.

2025ஆம்ஆண்டுஒதுக்கீட்டுசட்டமூத்தைச் சமர்ப்பிக்கவே நாங்கள் இந்தமுறை சம்பள அதிகரிப்புதயாரித்தோம். அதனால்இந்தசம்பள அதிகரிப்புதீர்மானம் இருக்கும்வரை அதனை வரவுசெலவுதிட்டத்தில் உள்ளடக்கவேண்டும். நாங்கள் எடுத்த தீர்மானம் பிழை என்றால் அதனை நீக்கவும்.

தற்போதைய ஜனாதிபதிக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி இருப்பதாக தற்போது அவர்கள் தெரிவிக்கின்றனர். அது தேவையில்லை. நாங்கள் அமைச்சரவை தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கிறோம். அதனை செயற்படுத்த வேண்டும். எனவே இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடுவது ஆளும்தரப்பைப் பெற்றுக்கொண்டு இந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கேயாகும்.

அநுரகுமாரவால் ஜனாதிபதியாக இருக்க முடியும். அதில் பிரச்சினை இல்லை. எனக்கு போன்றே அவருக்கும் பெரும்பான்மை இல்லாமையால் யார் இருந்தாலும் பிரச்சினையில்லை என்றார்.

## வாக்காளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நவம்பர் 7வரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்குச்சென்றுவிநியோகிக்கவுள்ளோம் என்றுபிரதித்தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாததால், அந்த மாவட்டத்தில் இன்று விநியோகம் செய்யப்படமாட்டாது என தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 3 விசேட விநியோக தினமாக அறிவிக்கப்பட்டு. வாக்காளர் அட்டைகளை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை விநியோகிக்கப்படும் எனவும் தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

## நாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பிடம் இல்லை.

நமது நாடு 2028 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டுக் கடனைச் செலுத்தவேண்டும். இதற்குத் தேவையான டொலர் கையிருப்பை நாம் கொண்டிருக்க வேண்டும். எனவே, டொலர்களைப்பெறும்முறைகள்வேகமானதாக இருக்கவேண்டும். 2028இல், டொலர்கள் இல்லாமல்கடனைச்செலுத்த முடியாவிட்டால், நாடு மீண்டும் வங்குரோத்தடையும்.

அடுத்த நான்கு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டும். மந்தமான பொருளாதாரத்தைக் கொண்டு கடனை அடைக்க முடியாது. இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே மக்களை வாழ வைக்க முடியும். எனவே இதற்கு அனைவரும் எம்மோடு இணைந்து கொள்ளவேண்டும் என்று சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

அனைவரும் ஒன்றாக இணைந்து வாழ முடியுமான, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாட்டை உருவாக்கி, பட்டினி இல்லாத நாட்டை உருவாக்க ஐக்கிய மக்கள் ஆட்சிக்கு பக்க பலத்தை பெற்றுத் தாருங்கள். 220 இலட்சம் மக்களின் தேவையின் அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்பத் தயார் - என்றார்.

## தமிழர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்போர்முடிவடைந்து15வருடங்கள் கடக்கின்றன. இந்த 15 வருடங்களில் எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் நாளாந்தம் போராட்டங்களைமுன்னெடுத்துவருகின்றனர்.

இவர்களின் ஒரு போராட்டத்திலாவது ஜே.வி.பி கலந்துகொண்டுள்ளதா? வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இடம்பெற்று வருகிறது. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட்டம் இடம்பெற்று வருகிறது. தனியார் காணிகள் அபகரிப்பு எதிராக பாதிக்கப்பட்ட எமது மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவற்றில்ஏதாவதுஒன்றிலாவது இந்த ஜே.வி.பி. தரப்பினர் அல்லது தேசிய மக்கள் சக்தி என கூறப்படுகிறவர்கள் கலந்து கொண்டுள்ளார்களா? இல்லை.

இலங்கையின் பிரதான கட்டமைப்பாக அரசமைப்பு அமைப்பு காணப்படுகிறது. அந்த அரசமைப்பு மூன்று தடவை புதிது புதிதாகக் கொண்டு வந்து நிறைவேற்றிப்படுள்ளது. மூன்று அரசியல் அமைப்பையும் எமது மக்கள் நிராகரித்தனர்.

நாட்டின் பிரதான சட்டத்தை இரண்டாவது இனம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகிறது என்றால்அதற்கான அர்த்தம்அந்த இனத்திற்கு ஓர்இனப்பிரச்சினை உள்ளதுஎன்பதேயாகும்.

சர்வதேச சமூகம் 2012ஆம் ஆண்டில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானத்திலும் தெளிவாக வலியுறுத்துகின்றது இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசமைப்பைநிறைவேற்றவேண்டும். அப்படி கூறுகின்றபடியால் போருக்குப் பின்னர் ஒரு தீர்வு காண்பதற்கான நாடகமாவது இங்கு நடிக்கப்பட வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

ஒருதீர்வில்லாதயோசனையைக்கொண்டு வந்தால்அதைத்தமிழ்மக்கள்நிராகரிப்பார்கள். நிராகரித்தால் இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கும்,அப்படி தொடர்வதாக இருந்தால் சர்வதேச மட்டத்தில் தமக்கு தேவையற்ற அழுத்தங்கள்வரும்என்கிறஒருபிடியையாவது நாங்கள் இன்று வைத்துள்ளோம்.

அந்தப் பிடியை இல்லாமல் செய்வதற்கு தான் ஒற்றையாட்சி அரசமைப்பு கொண்டு வரப்பட்டு,வடக்கு கிழக்கில் சரித்திரத்தில் முதல் தடவையாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பெரும்பான்மை ஆதரவோடு,அதைநிறைவேற்றிஉலகத்திற்கே தமிழ் மக்கள் இந்த அரசமைப்பை ஆதரித்து விட்டார்கள் என்ற செய்தியைக் காட்டுவதற்கு முயல்கின்றார்கள்.

இதுதான் எமக்கு உள்ள மிகப்பெரிய சவால். ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் நிராகரிப்பதாக இருந்தால் அதனை நிராகரிக்கக் கூடிய, செயற்படுத்தக்கூடிய ஒரு அணியாக இந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியே உள்ளது - என்றார்.

## முஸ்லிம்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட முதன்மை வேட்பாளருமான கலாநிதி ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி அல் அக்ஸா சதுக்கத்தில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். அடக்கி ஒடுக்கிய முஸ்லிம் சமூகத்தை இம்மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கு அரச நிர்வாகப் பயங்கரவாதம் மிகத் தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒட்டுமொத்த மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்குமானஒருபிரதிநிதியைபெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு காத்தான்குடி மக்களின் தலைகளில் சுமத்தப்பட்டுள்ளது என்றார்.

## தேமச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே

தொடர்ச்சி 8ம் பக்கம்....

### இலங்கையின் பிரிக்ஸ் முயற்சி:

# பொருளாதாரம் - அணிசேரா ராஜதந்திரத்தை உயர்த்துவதற்கான மூலோபாய நடவடிக்கை

## வெளிவிவகார அமைச்சு செயலர் கருத்து




பிரிக்ஸ் அமைப்பின் இணைவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சாதகமான பதிலளிப்புகளை உறுப்பு நாடுகள் வழங்கியுள்ளன.

இதன் முன்னேற்றங்கள் குறித்து முழுமையான அறிவிப்பை, வெளிவிவகார செயலாளர் ஹரினி விஜேவர்தன நாட்டுக்கு வழங்குவார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரிக்ஸ்அமைப்பில்சீனாவுடனான இந்தியாவின் ஈடுபாடு இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. இந்நிலையில், பிரிக்ஸ் அமைப்பில் இலங்கையை இணைத்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் வலுவாக உள்ளன. இந்தியா ஊடாக தெற்காசியாவை அணுகும் அமெரிக்காவின் முக்கிய பங்காளியாக டெல்லி இப்போது உள்ளது.

மறுபுறம் பிரிக்ஸ் உறுப்பினராக இந்தியா உள்ளதுடன், சீனா மற்றும் ரஷ்யாவுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளைப் பேணுகிறது. உலகளாவிய கிழக்கில் நிகழ்ந்துவரும் பொருளாதார மாற்றத்தை இந்தியா அவதானித்து, அதைச் சாதகமாக்க முயல்கிறது. இந்த நிலைப்பாடு இலங்கைக்கும் பயனளிப்பதாக அமையும் என்பது பொருளாதார நிபுணர்களின் எதிர்வுக்கூறலாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரிக்ஸ் உறுப்புரிமையில் இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதேவேளை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரிக்ஸ் நாடுகளின் ஆதரவை கோரியுள்ளார். ஆனால் பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான இந்த முடிவு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் மாத்திரம் எடுக்கப்படவில்லை. முந்தைய அமைச்சரவை இந்த முடிவை அங்கீகரித்திருந்தது.

அனைத்து இராஜதந்திர தளங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்த பின்னர், இந்தியாவின் உத்தியோகபூர்வ ஒப்புதலுடன் இலங்கை பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது. பிரிக்ஸ் அமைப்பில் இணையும்போது, எந்தவொரு மோதலையும் வளர்க்கும் எண்ணம் இலங்கைக்கு இல்லைஎன்பதைமேற்குநாடுகளுக்குஉணர்த்துகிறது. மேலும் இலங்கையின் நீண்டகால அணிசேராக் கொள்கையைஉறுதியாகநிலைநிறுத்தவும்முடிகிறது.

எவ்வாறாயினும் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகள் சமீபத்தில் பிரிக்ஸ் அமைப்பில் இணைந்துள்ளன. இலங்கை, இந்தோனேசியா மற்றும் அர்ஜென்டினா உட்பட 30 இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த அமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

2028 ஆம் ஆண்டில் இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தத்தொடங்கும்அவசியத்தை எதிர்கொள்வதால், பொருளாதார வளர்ச்சியின் அவசரத் தேவை உள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு, நிலையான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவசியமான மூலோபாய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு நாட்டிற்கு மூலதனம் தேவைப்படுகிறது. பிரிக்ஸ் அமைப்புடன் இலங்கை செய்து கொள்ளும் ஒப்பந்தம், உத்தேசிக்கப்படுகின்ற மூலதனத்தில் குறிப்பிட்டளவை பெறுவதற்கு உதவும். - என்றார்.(05)

# மஹரகமையில் கைவிடப்பட்ட நிலையில் காரொன்று மீட்பு

மஹரகம, பழைய வீதியில் உள்ள ஆடை விற்பனைநிலையம்ஒன்றிற்குமுன்பாககைவிடப்பட்ட நிலையில் கார் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காரில் மனித உரிமைகள் அமைப்பு ஒன்றின் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கார் பல இடங்களில் விபத்துக்குள்ளாகியிருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹரகம வர்த்தக சங்க உறுப்பினர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து இந்த கார் கைப்பற்றப்பட்டுள்ளது.



மேலும் , இந்த காரிற்கு அருகில் பல வெற்று மதுபான போத்தல்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# பொலிஸார் மூவர் பணி இடைநீக்கம்

பமுனுகம பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களைப் பலமாகத் தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பமுனுகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

போபிட்டிய, பமுனுகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வசிக்கும் இரு இளைஞர்கள் திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பமுனுகம பொலிஸாரால் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட 20 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் பலமாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

பின்னர், காயமடைந்த இரு இளைஞர்களுக்கும் நீதி கோரி பிரதேசவாசிகள் சிலர் பமுனுகம பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.(05)

# அறுகம்பைக் குடாத் தாக்குதல் திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி?

## நிதி, பயிற்சி வழங்கப்பட்டதா என விசாரணை

வெளிநாடொன்றின்ஆதரவுடனேயேஅறுகம்பைக் குடாவில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்காகதிட்டமிடப்பட்டதாகதெரிவித்துள்ள சண்டே டைம்ஸ் ஒக்ரோபர் 19 முதல் 24 ஆம் திகதிக்குள் இந்த தாக்குதலை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.

சண்டே டைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் அறுகம்பைக் குடாவில் உள்ள அவர்களது வழிபாட்டுதலத்தில் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டிருக்கக் கூடிய பெரும்ஆபத்தைபொலிஸார்தடுத்துநிறுத்தியுள்ளனர்.

ஒக்ரோபர் 19 முதல் 24 ஆம் திகதி இந்தத் தாக்குதலிற்கு திட்டமிட்டிருந்தனர், இந்த வாரத்தில் இஸ்ரேலியர்கள் பெருமளவில் கலந்துகொள்ளும் நிகழ்வு இடம்பெறவிருந்தது என புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாடொன்று இந்தத் தாக்குதலை மேற்கொள்வதற்கு எவ்வளவு தூரம் ஆதரவு வழங்கியது எவ்வளவு நிதி வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொள்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டனவா என்பது குறித்தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன.(05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

## கற்பிட்டி பாலக்குடா பகுதியில் சம்பவம்

(சியாஜ்)

கற்பிட்டி பாலக்குடா பகுதியிலிருந்து தலவில் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் தலவில் பகுதியிலிருந்து பாலக்குடா நோக்கி வருகைத் தந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு பாலக்குடா தலவில் பிரதான வீதியில் இடம்பெறுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் ஒருவர் கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் 5 வயது சிறுமி உட்பட இருவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்போது கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் கற்பிட்டி தலவில் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய எஸ்.கே.சி ரனீஸ்க குரேரா என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி போக்குவரத்துபொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.(05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனிக்கவேண்டிய விவகாரம்

இலங்கையில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று விடுக்கப்பட்ட எச்சரிக்கை மற்றும் மேற்கு நாடுகளின் சுற்றுலாவிகளுக்கான அறிவுறுத்தல்களின் பின்னணியில் கொழும்பு மாவட்ட வேட்பாளரான புபுது ஜெகொட வெளியிட்டிருக்கும் தகவல்கள் மீது ஆளும் தரப்பு அக்கறை செலுத்துவது கட்டாயம்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களைக் கோபமூட்டும் வகையில் இஸ்ரேலிய சுற்றுலாவிகள் நடந்துகொண்டனர் என்று புபுது ஜெகொட குற்றஞ்சாட்டியுள்ளார். அது தொடர்பான விவரங்களையும் இஸ்ரேலியர்கள் இலங்கையில் சட்டவிரோதமாக மேற்கொள்ளும் செயற்பாடுகள் குறித்தும் அவர் விளக்கியுள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அவர் இந்த விவரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வந்திருக்கும் இஸ்ரேலியர்கள் திருகோணமலைமாவட்டத்தில்ஒருசிலஇடங்களில்முஸ்லிம்மக்களை கோபமூட்டும் வகையில் காஸாவில் இடம்பெற்றுவரும் இன அழிப்பு தொடர்பான சித்திரங்களை மதில்களில் வரைந்திருக்கின்றனர்.

அதேபோன்று, போரில்கொல்லப்பட்ட, இஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரின் படம் பொறிக்கப்பட்ட சுவராரொட்டிகள் திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முஸ்லிம்களின் பள்ளிவாசல் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் வரையான தூரத்தில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்களை யார் செய்கிறார்கள் என்பதை ஆளும்தரப்புத் தேடிப்பார்க்கவேண்டும்.

காஸாவில் இடம்பெறும் இஸ்ரேல் இராணுவத்தின் இன அழிப்புக்கு எதிராக இலங்கையில் ஆட்சியில் இருந்த அனைத்து தரப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பலஸ்தீனுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்து வந்திருக்கின்றன. இந்தப் பின்னணியில் இஸ்ரேலியர்களின் நடவடிக்கைகளை உற்று நோக்கவேண்டும்.

சுற்றுலா விசாவில் வருபவர்கள் எவ்வாறு மதில்களில் சித்திரம் வரையவும் சுவரொட்டிகளை ஒட்டவும் முடியும்? எமக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அந்தப் பிரதேசத்தில் தங்கி இருக்கும் இஸ்ரேல் இனவாதப் பிரிவினரே இதனைச் செய்துள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலியர்கள் நாட்டுக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். அவர்களுக்குகட்டடங்கள் இருக்கின்றன. பொலிஸ் பேச்சாளரும் இதனைத் தெரிவித்திருந்தார். சுற்றுலா விசாவில் வந்து எவ்வாறு வியாபாரம் செய்ய முடியும்?

யூதர்களுக்கான மத வழிபாட்டு தலங்களும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. தெஹிவளை அல்விஸ் பிரதேசத்தில் யூத மத வழிபாட்டு இடமொன்று நிர்மாணிக்கப்படுகிறது. எவ்வாறு இதற்கு இடமளிக்க முடியும்? தெஹிவலை, வெளிகமை, அறுகம்பே போன்ற இடங்களிலும் யூத வழிபாட்டு நிலையங்கள் நிர்மானிக்கப்படுகின்றன. அந்த வழிபாட்டு நிலையங்களுக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதனால் முஸ்லிம் பகுதிகளில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலியர்களை இலக்குவைத்து தாக்குதல் இடம்பெறப்போவதாக தெரிவிக்கப்படும் தகவல் தொடர்பிலும் சந்தேகம் எழுகிறது. நாடுக்குள் இஸ்ரேலியர்களின் நடவடிக்கை சந்தேகத்திற்கிடமான வகையில் சில காலமாகவே இருந்து வருகிறது.

அதேபோன்று அண்மையில் சுற்றுலாப் பயணிகள் என இஸ்ரேலியர்கள் 20ஆயிரம் பேர்வரை இலங்கைக்கு வந்தனர். அவர்களில் இஸ்ரேல் இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர் என்றெல்லாம் புபுது தெரிவித்திருக்கிறார்.

காஸாவில் இன அழிப்பில் ஈடுபடும் தமது படையினருக்கு மன அழுத்தம் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இஸ்ரேலிய அரசு அவர்களுக்கு விடுமுறை வழங்கி இலங்கை போன்ற நாடுகளுக்குச் சுற்றுலாவுக்கு அனுப்புகின்றது என்றும் அப்படி வருகின்ற இஸ்ரேலியர்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

”இன அழிப்பை மேற்கொண்டுவரும் இஸ்ரேல் இராணுவத்தினர் மன அழுத்தத்தில் இருந்து மீள இலங்கையின் வளங்களை பயன்படுத்துகிறதா என்பது தொடர்பாகவும் இஸ்ரேலியர்களால் நாட்டுக்குள் நிர்மாணிக்கப்படும் சட்டவிராதே கட்டடங்கள் மற்றும் அவர்களின் மத வழிபாட்டு தலங்களுக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது தொடர்பிலும் தற்போதுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இதற்கு முன்னர் இருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் தெளிவுபடுத்தவேண்டும். பொலிஸ்மா அதிபரும் விளக்கமளிக்க வேண்டும்” என்றும் புபுது வலியுறுத்தியுள்ளார்.

ஆளும்தரப்பு அவரது குற்றச்சாட்டுக்களைக் கவனத்தில் எடுத்து உரிய விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தவேண்டும். இஸ்ரேலியர்கள்தமது நாட்டின்பிரச்சினையை முன்வைத்து இலங்கையில் கலவரங்களை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப்படக்கூடாது. அதுதொடர்பில்ஆளும்தரப்புஎச்சரிக்கையுடன் இருப்பது மட்டுமல்லாமல் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் இஸ்ரேலியர்களை உடனடியாக இனங்கண்டு நாடுகடத்தவும் வேண்டும்.

## அமெரிக்க அதிபர் தேர்தல் வினோதம்!

தெய்வீகன்



அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கானபரப்புரை, விவாதங்கள்நடக்கின்றன. உலகமேஇந்தத்தேர்தல் முடிவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது; உலகின் மிகப் பெரிய பணக்கார நாடாகவும், பாரம்பரியமுள்ள ஜனநாயக நாடாகவும் திகழும் அமெரிக்கா வல்லரசாகவும், பிற நாடுகளின் உள்விவகாரங்களில்கூட தலையிட்டு நாட்டாமை செய்யும் பெரிய அண்ணனாகவும் இருப்பதாலும் இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

நாட்டு மக்கள் அனைவரும் வாக்களித்துத்தான் அதிபரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்றாலும் அவர்கள் அனைவருமே அதிபருக்கு நேரடியாக வாக்களிப்பதில்லை என்பதுதான் இங்கு வினோதம்.

அதிபரைத் தேர்ந்தெடுக்க முதலில் தங்களுக்குள் மாநில வாரியாக தேர்தல் குழாமைத்தான் (எலக்டோரல் கொலீஜ்) மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தத் தேர்தல் குழாத்தில் இடம்பெறுகிறவர்களே இறுதி வாக்காளர் குழுவாக இருந்து அதிபரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது சற்றே குழப்பம் தருவதாக இருக்கிறதா? இது எப்படிச்செயல்படுகிறது, ஏன் இந்த ஏற்பாடு என்பதையும் அடுத்து இனி காண்போம்.

### 538 பேருள்ள வாக்காளர் குழு

அமெரிக்க நாட்டில் அதிபரைத் தேர்ந்தெடுப்பது 538 பேரைக் கொண்ட இறுதி வாக்காளர் குழு மட்டுமே. அனைத்து வாக்காளர்களும் முதலில் வாக்களிப்பது இந்தக் குழுவைத் தேர்ந்தெடுக்கத்தான். இந்தக் குழுவில் இடம்பெறுகிறவர்கள் யார்?

தேர்தலுக்கு முன்னால் குடியரசு, ஜனநாயகம் ஆகிய இரண்டு கட்சிகளும் மாநில வாரியாக, வாக்களிப்பதற்கான பிரதிநிதிகளை முதலில் தேர்ந்தெடுக்கின்றன. இவர்கள்தான் இறுதியாக அதிபர் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப்போகிறவர்கள். இது எப்படி மக்களுடைய உண்மையான தேர்வைப் பிரதிபலிப்பதாக இருக்கும்? பெரும்பாலும் இருக்கும் – சில வேளைகளில் மாறியும் போகும்! இந்தப் பிரதிநிதிகள் அனைவருமே அரசியல் கட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் அல்லது ஆதரவாளர்கள்.

### சம பிரதிநிதித்துவம்

மாநிலத்தின் நிலப்பரப்பளவு வேறுபட்டாலும் மக்கள்தொகை வேறுபட்டாலும் எல்லா மாநிலத்துக்கும் சம எண்ணிக்கையில்தான் பிரதிநிதிகள் இந்தத் தேர்தல் குழாமில் இடம்பெறுவார்கள். அதிலும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் பிரதிநிதிகள் அவையிலும் செனட் அவையிலும் எவ்வளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களோ அதற்கு சம எண்ணிக்கையில்தான் இந்தத் தேர்தல் குழாத்திலும் இருப்பார்கள். உதாரணத்துக்கு மிச்சிகன் மாநிலத்துக்குத் தேர்தல் குழாம் வாக்குகள் 15. நாடாளுமன்றத்தில் அந்த மாநிலத்துக்கு 2 செனட்டர்கள், 13 பேர் பிரதிநிதிகள் அவை உறுப்பினர்கள்.

அதிபரைத் தேர்ந்தெடுக்கிறவர்கள் யார் என்று தெரிந்துவிட்டது, அவர்கள் எத்தனை பேர் என்பதும் தெரிந்துவிட்டது. அவர்கள் அளிக்கும் வாக்குகள் எப்படி அதிபருக்குச் சேருகின்றன என்பதில்தான் அந்த வினோதத்தின் மையக் கருவே இருக்கிறது.

### வெற்றியாளருக்கே அனைத்தும்!

ஒரு மாநிலத்தில் 15 வாக்குகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம், ஒருவருக்கு 8 பேரும் இன்னொருவருக்கு 7 பேரும் வாக்களித்தாலும் இறுதியில் அந்த 15 வாக்குகளும் 8 வாக்குகள் பெற்றவரையே சேரும். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் பெறப்படும் வாக்குகள் எண்ணிக்கை கூட்டப்படும்.

இதிலும் ஒரு உள்குத்து இருக்கிறது. மைனே, நெப்ராஸ்கா போன்ற தொலைதூர மாநிலங்கள் தங்களுடைய தேர்தல் குழாமை, மக்கள் அளிக்கும் உண்மையான வாக்குகள் அடிப்படையில் தேர்வுசெய்யும் சிக்கலான துணை நடைமுறையும் இருக்கிறது.

நாட்டின் தலைநகரம் அமைந்துள்ள கொலம்பியா மாவட்டம் ஒரு மாநிலம் இல்லையென்றாலும் அதற்கும் 3 தேர்தல் குழாம் வாக்குகள் தரப்பட்டுள்ளன. வெள்ளை மாளிகையில் அதிபராக பதவியில் அமர வேண்டுமென்றால் மொத்தமுள்ள 538 தேர்தல் குழாம் வாக்குகளில் குறைந்தபட்சம் 270 பேரின் ஆதரவை வென்றிருக்க வேண்டும்.

### நவம்பரில் வாக்களிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் நவம்பர் மாதம் வாக்களிப்பார்கள். இந்தத் தேர்தல் குழாம் உறுப்பினர்கள் ஒரு மாதம் கழித்து டிசெம்பரில் வாக்களிப்பார்கள். அவர்களுடைய வாக்குகளை எண்ணி, அமெரிக்க நாடாளுமன்றம் சான்றளித்த பிறகே, ஜனவரி தொடக்கத்தில் அதிபர் பதவியேற்பார். எப்படி இருக்கிறது இந்தத் தேர்தல் முறை?

அதிபர் தேர்தலில் 270க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவை ஒருவர் பெற வேண்டுமென்றால், முக்கியமான ‘பெரிய என்றும் சொல்லலாம்’ மாநிலங்களில் அதிக வாக்குகளைப் பெறுவது அவசியம். மக்கள் அளிக்கும் வாக்குகளில் ஒருவர் அதிகபட்சம் பெற்றாலும், தேர்தல் குழாமின் வாக்குகள் அதை எதிரொலிக்கவில்லை என்றால் அவரால் வெற்றிபெற முடியாது.

### ஹிலாரி தோல்வி

சமீபத்திய உதாரணம் இதோ: 2016இல் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஹிலாரி கிளிண்டனுக்குத்தான் பெருவாரியான மக்கள் நேரடியாக வாக்களித்திருந்தார்கள். ஆனால், குடியரசு கட்சியின் டொனால்ட் டிரம்ப், ஃபுளோரிடா - பென்சில்வேனியா மாநிலங்களில் வாக்காளர் குழாமை முழுமையாக கைப்பற்றியதால் வென்றார். அங்கே இரு மாநிலங்களுக்கும் தலா 20 வாக்குகள்.

இப்படி வாக்காளர் குழு முறையை அதிபர் தேர்தலில் உட்புகுத்தியதன் காரணம் எந்தவொரு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்க அதிபர்.....

4ம் பக்க தொடர்ச்சி...........

மாநிலமும் தனிச் செல்வாக்குச் செலுத்திவிடக் கூடாது, நாட்டின் அனைத்து மாநிலங்களும் சம முக்கியத்துவம் பெற வேண்டும், முக்கியமாகக் கருதப்பட வேண்டும் என்பதுதான். மாநிலங்களுக்கு அரசியல் அதிகாரத்தில் சம பங்கும் பொறுப்பும் இருப்பதை அமெரிக்க கூட்டாட்சி முறை பல வழிகளிலும் உறுதிசெய்திருக்கிறது.

‘இந்தத் தேர்தல் குழாம் முறை நீக்கப்படவேண்டும், மக்களிடையே நேரடியாக அதிக ஆதரவு பெற்றவரையே அதிபராகத் தேர்ந்தெடுக்க வேண்டும், பல நாடுகளில் உள்ள இதே நடைமுறையை நாமும் பின்பற்ற வேண்டும்’ என்று இப்போதும் பல அமெரிக்கர்கள் வலியுறுத்துகின்றனர்.

‘மக்கள்தொகை அதிகமுள்ள மாநிலங்கள் அரசியலில் அதிகம் செல்வாக்குப் பெற்றுவிடாமல் தடுக்கவும், அரசில் சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம் பெறவும் இந்த வாக்காளர் குழு முறைதான் பயன்படுகிறது, எனவே இதுவே தொடர வேண்டும்’ என்கின்றனர் மற்றவர்கள்.

© அல் ஜஸீரா

# ஜனவரி நடுப்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்

ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்த போதும், அதற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை என்று கூறி தேர்தலை அரசு ஒத்திவைத்தது.

அதுவரை செயற்பட்டு வந்த 331 உள்ளூராட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவடைந்தது. அந்த நிறுவனங்கள் தற்போது சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

இதையடுத்து, இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை பரிசீலித்த உச்ச நீதிமன்றம், உள்ளூராட்சி தேர்தலை விரைவில் நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் 20 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் பொதுத் தேர்தலின் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (05)







காலைக்கதிர் Kalaikkathir

# திடீர் சுகவீனத்தால் உயிரிழந்த 15 வயது மாணவியின் உடல் பாகம் பகுப்பாய்வுக்கு

குருணாகல், கிரியுல்ல , மெத்தேபொல பிரதேசத்தில் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்த 15 வயது பாடசாலை மாணவியின்உடல்பாகங்கள்மேலதிகபரிசோதனைக்காக அரசாங்கஇரசாயனபகுப்பாய்வாளர்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

இந்த பாடசாலை மாணவி கடந்த 23 ஆம் திகதி அன்று இரவு உணவிற்காக கிரியுல்ல நகரத்தில் உள்ள உணவகம் ஒன்றிலிருந்து கோழி பிரியாணி பொதி ஒன்றை கொள்வனவு செய்து வீட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், பாடசாலை மாணவி இரவு உணவை உட்கொண்ட பின்னர் திடீரென சுகவீனமுற்றுள்ள நிலையில்தம்பதெனியவைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த பாடசாலை மாணவியின் உடலில் அரிப்புகள் ஏற்பட்டு தழும்புகள் தோன்றியுள்ளதாக வைத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

பாடசாலைமாணவியின்சடலம்குருணாகல்வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து மாணவியின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(05)

# இரத்தினபுரியில் கார் விபத்தில் இளைஞன் சாவு: ஐவர் காயம்

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எம்பிலிப்பிட்டிய - செவனகல வீதியில் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரக்கறி கடை ஒன்றின் மீது மோதி பின்னர் அருகிலிருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எம்பிலிப்பிட்டியிலிருந்து செவனகல நோக்கிப் பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது, காரில் பயணித்த சாரதி உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ள நிலையில்எம்பிலிப்பிட்டியவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரிஎம்பிலிப்பிட்டியபிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




# பாணந்துறை கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்

பாணந்துறை கடற்கரை பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

55 முதல் 60 வயது மதிக்கத்தக்க 05 அடி 05 அங்குலம் உயரமுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அத்தனகலு ஓயாவில் மூழ்கிய இளைஞன் சடலமாக மீட்பு

அத்தனகலு ஓயா ஆற்றில் மூழ்கி காணாமல்போன இளைஞர் சனிக்கிழமை சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்; என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே காணாமல் போயுள்ளார்.

இந்த இளைஞர் தனது சக பணியாளர்களுடன் இணைந்து அத்தனகலு ஓயாவில் நீராடிக்கொண்டிருந்துள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் சுமார் 4 மணி நேர தேடுதல் நடவடிக்கையின் பின்னர் இளைஞரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு

## இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி, மாரபன, தலாவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் சனிக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இந்த வீட்டினுள் ஒரு பிள்ளை மற்றும் பெற்றோர் உட்பட ஐந்து பேர் இருந்துள்ள நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் சுரங்கத் தொழிலாளர் ஒருவர் எனவும் சுரங்கத் தொழிலில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மாணவிக்கு கடிதம் எழுதிய அதிபர்

## மக்கள் ஆர்ப்பாட்டம்

ஹற்றன்கல்விவலயபாடசாலையொன்றின்அதிபர்தனதுபாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை தனிமையில் சந்திப்பதற்கு வருமாறு கடிதம் எழுதிய விடயம் அம்பலமானதால் அப்பாடசாலை அதிபருக்கு எதிராக பெற்றோர்களும் பிரதேச மக்களும் வெள்ளிக்கிழமை பாடசாலை முன்றிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த மாணவியை பாலியல் ரீதியாக அதிபர் சீண்டலுக்கு உட்படுத்தியிருக்கலாம் என்றும் இதன்போது சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

அந்த மாணவியும் இதற்கு முன்னர் அதிபர் தன்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டமை தொடர்பில் அதே அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதமும் தற்போது வெளிப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று ஹற்றன் வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள பாடசாலை அதிபர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டம் செய்த பெற்றோர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

அந்த அதிபர் அரசியல் பின்புலத்தை கொண்டிருப்பதால் பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவில்லை. – என்றனர்.

எவரும் முறைப்பாடு செய்யாத நிலையில் தம்மால் உடன் நடவடிக்கை எடுக்க முடியாது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில காலங்களாக ஹற்றன் கல்வி வலய பாடசாலைகளில் மாணவர்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை முக்கிய விடயமாகிறது. (05)

## தேமச....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்பிட்டிய பிரதேசசபை தேர்தல் முடிவுகள் நாட்டுக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது. அதாவது கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார 42 வீதமான வாக்குகளை பெற்றிருந்தார். அந்த வகையில் 58 வீதமான வாக்குகள் அவருக்கு எதிராக இருந்தது.

ஜனாதிபதி தேர்தலின் பிறகு உடனடியாக ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் தேர்தலில் வென்ற கட்சிக்கு வாக்குகள் அதிகரிப்பதுவே வழமை. ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்ற செய்தியை எல்பிட்டிய தேர்தல் நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கின்றது.

அந்தத் தேர்தல் முடிவுகளின்படி தனித்து நின்று ஜனாதிபதியுடைய கட்சியால் ஆட்சி செய்யமுடியாது என்ற செய்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்திக்கு ஒவ்வொரு நாளும் வாக்குகள் குறைவடைந்துகொண்டே செல்கின்றன.

எனவே தமிழ் பேசுகின்ற மக்கள் ஆழமாக சிந்தித்து இந்ததேர்தலில் தங்களது பிரசதேசங்களுக்காகப் பணியாற்றக்கூடிய நல்லவர்களுக்கு சந்தர்பத்தை வழங்கவேண்டும். வன்னியில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட ஆசனங்கள் எமக்குகிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் முல்லைத்தீவில் சிறந்த ஒரு கல்விமானான ரமணனைக் களம் இறக்கியிருக்கிறோம்.

தேர்தலுக்கு முன்னர் பேசுவது இலகுவாக இருக்கலாம். ஆனால் பின்னர் பேசிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது கடினம். செய்யக்கூடியதை சொல்லியிருந்தால் மாத்திரமே செய்யமுடியும். எனவே நாம் தேர்தல் கோசங்களிற்கு ஏமாந்து வாக்களிக்காமல் ஒன்றுபட்டு எமக்குச் சேவைசெய்யக்கூடிய வேட்பாளர்களை தெரிவுசெய்யவேண்டும். அதுதமிழ்கட்சிகளாக இருந்தாலும் பறவாயில்லை முஸ்லீம் கட்சிகளாக இருந்தாலும் பறவாயில்லை.

நாம் எமது தலைமைகளை இழந்துவிடக்கூடாது. சிறுபான்மைச் சமூகங்கள் தலைமைகளை இழந்துவிட்டால் நம்மை அடக்கி துன்பப்படுத்தும்போது அதற்கு எதிராக பேசுவதற்குத் தலைமைகள் இல்லாத நிலையே ஏற்படும்.

ஒருகாலத்தில் சம்பிக்கவும், சன்ன ஜயசுமனவும்சஜித்துடன்இருக்கிறாா்கள்என்று சொன்னார்கள். ஆனால் தற்போது சம்பிக்க சஜித்துடன் இல்லை, சன்னஜயசுமனவும் இல்லை அவர்களை சஜித் பிரேமதாச நிராகரித்துள்ளார். எனவே சிறுபான்மை மக்களுக்காகப் பேசக்கூடிய அல்லது தீர்வைப் பெற்றுதரக்கூடிய ஆளுமை உள்ள தலைவராக சயித்பிரேமதாசவையே பார்க்கின்றோம். ஏனைய எதிர்கட்சிகளையும் இணைத்துக்கொண்டுஆட்சியமைக்கக்கூடிய வாய்ப்பு எமக்கு இருக்கிறது என்றார்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுகிய காலப்பகுதிக்குள் மலையக மக்கள் தொடர்பில் அரசியல், பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம். வீடமைப்பு திட்டம்கூட மீள ஆரம்பிக்கப்பட்டது. எனினும், ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு மலையக மக்கள் தொடர்பில் இன்னும் எவ்வித திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என ஜனாதிபதி தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியினர் உறுதியளித்திருந்தனர். ஆனால் பொருட்களின் விலை தற்போது அதிகரித்துள்ளன. நாம் ஜனாதிபதியை விமர்சிக்கவில்லை. இன்னும் பொருளாதார நெருக்கடி உள்ளது. மக்களும் சற்று பொறுமை காக்க வேண்டும். ஆட்சி மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை சந்திக்க வேண்டும்.

எரிபொருள் விலைகூட கணிசமான அளவு குறையும் எனக் கூறியிருந்தனர். ஆனால் ஓரளவுதான் குறைந்துள்ளது. எமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமையவே செயற்பட வேண்டியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் சிலர் இன்று கேள்வி எழுப்புகின்றனர். அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 350 ரூபாவும், ஊக்குவிப்பு தொகையாக 350 ரூபாவையும் பெற்றுதருவோம்எனநாம்உறுதியளித்தோம். அதற்கான வர்த்தமானியும் வெளியானது.

தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் நாம் கடந்த ஆட்சியின்போது அடிப்படை சமபளம் ஆயிரத்து 350 ரூபாவுக்கு இணங்கி இருக்காவிட்டால் இன்று அந்த அதிகரிப்புகூட கிடைக்கப்பெற்றிருக்காது. எஞ்சிய தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை முன்னெடுப்போம்.

தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங் கமானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது. எனவே, சம்பள நிர்ணய சபையைக்கூட்டி அதற்குரிய யோசனையை ஆளும்தரப்-பு முன்வைக்கவேண்டும். அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம்.

அதேவேளை கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் அரச பெருந்தோட்ட யாக்கத்தால் கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. 14 நாட்கள் தொடர்;ச்சியாக வேலைக்கு வராவிட்டால் வெளியேற்றப்படுவீர்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, எமக்கான பிரதிநிதித்துவம் இருந்தால்தான் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் மக்கள் சிக்கக்கூடாது. எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

## அநுரவைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியைச் சந்திப்பவர்களுக்கு எல்லாம் அமைச்சுப் பதவி வழங்கப்போவதில்லை ஷஎன்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டமானது அதன் மாவட்ட இணைப்பாளர் சிதம்பரநாதன் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது:

அநுரகுமார திசநாயக்க ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர். ரணிலோ, சஜித்தோ, நாமலோ கிராமத்தில் படித்து வளர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் வரிசையில் நின்று அரச வைத்தியசாலையில் மருந்து எடுத்திருப்பார்களா? இல்லை. ஏதாவது ஒரு விடயத்திற்குவரிசையில்இருந்திருப்பார்களா? அவர்களுக்கு சாதாரண மக்களுடைய பிரச்சினை தெரியாது. எமது வர்க்கத்தைச் சேர்ந்தவர் இப்போதுதான் ஜனாதிபதியாகி இருக்கின்றார்.

இதிலிருக்கும் கணிசமானவர்கள் போர்க் காலத்தில் பாதிப்படைந்தவர்களாக இருக்கலாம். பெரும்பாலனவர்களது வீடுகள் சேதமடைந்திருக்கலாம். அதேபோல் அநுரகுமார திசநாயக்கவின் வீடு 1979ஆம் ஆண்டு இராணுவத்தால் தாக்கப்பட்டிருந்தது.

இங்கிருப்பவர்களின் உற்றார், உறவினர்கள் போரில் உயிரிழப்புக்களைச் சந்தித்திருக்கலாம் அதேபோல் அநுரவின் ஒரேயொரு அண்ணனும் டயர் போடப்பட்டு எரித்துக் கொலைசெய்யப்பட்டார். அந்தப் போர் மிகவும் வித்தியாசமானது. சாதாரண சிங்கள, தமிழ் மக்கள், இளைஞர்கள்தான் அதில் கொல்லப்பட்டார்கள். சிறப்பம்சம் என்னவென்றால் சாதாரண அப்படிக் கொல்லப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புரிந்த ஒருவரே இன்று ஜனாதிபதி ஆகியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாணத்தில் மக்கள் மத்தியில் பதிந்து கொண்டு வருகின்றபடியால் பலகட்சிகள் அவதூறுகளை பரப்பிகொண்டு வருகின்றார்கள். டக்ளஸ் தேவானந்தா, சிறீதரன், சுமந்திரன் போன்றவர்கள் அனுரவைச் சந்தித்து வருகிறார்கள். இதிலிருந்தே அவர்கள் எவ்வளவுவங்குரோத்துஅடைந்திருக்கிறாா்கள் என்பதனை உணரமுடியும். அநுரவோடு படம் எடுத்த 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பார்கள். படம் எடுப்பதால் மட்டும் அமைச்சுப் பதவி வழங்கிவிடமாட்டோம். அப்படி அமைச்சர் பதவி கொடுப்பதாயின் படம் எடுத்தஅனைவருக்குமேகொடுக்கவேண்டும்.

'டீல்' அரசியலில் நாம் ஈடுபட மாட்டோம். அடுத்தஆளும்தரப்பில்அடுத்தஅமைச்சா்களாக பதவியேற்பதும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெறும் நேர்மையான ஊழலற்ற நபர்களே என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

நவம்பர் 4 பிரதமர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டம் ஒன்றிற்கு வருகின்றார். அதேபோல் நவம்பர் 10 வவுனியா மற்றும் யாழ்ப்பாணம்வருகின்றார். அக்கூட்டங்களிலும் நீங்கள் கலந்து கொள்ளவேண்டும். நவரம்பர் 14 தேர்தலுக்குப் பின்னர் மிக வேகமாக நாட்டை கட்டியெழுப்பும் பயணத்துடன் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்போம் என்றார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவிடம் சட்டமா அதிபர் திணைக்களம் கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தேர்தல்திகதிஅரசமைப்புச் சட்டப்படிதவறானது எனத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் அரச தரப்பு நிலைப்பாட்டை நவம்பர் 4 நீதிமன்றத்தில் முன்வைப்பதற்காகவே இந்த அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.

நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவது அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்பதை ஏற்றுக்கொண்டு பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பை நிறுத்துமாறு கோரி, ஒக்டோபர் 21 உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

'அப்பி சிறிலங்கா' என்ற அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், சிவில் செயற்பாட்டளருமான பிரியந்த ஹேரத்தினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கோரும் திகதிக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதிக்கும் இடையிலான நாட்களின் எண்ணிக்கை தேர்தல் சட்டத்தினை மீறும் வகையில் உள்ளதாகக் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 10ஆவது பிரிவின் பிரகாரம், வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதிகள் ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரை நிர்ணயிக்கப் பட்டிருந்தது. வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள் ளப்படும் கடைசித் தேதியிலிருந்து ஐந்து வாரங்களுக்குக் குறையாமலும் ஏழு வாரங்களுக்கு மிகாமலும் இருக்கும் காலப் பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்கிறது சட்டம்.

வேட்புமனுக்கள் ஏற்கப்படும் நாள் முடிவடைந்த ஒக்டோபர் 11 முதல் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் முடிவடையும் நிலையில் நவம்பர் 14 தேர்தல் அறிவிக்கப்பட்டது சட்டத்திற்குப் புறம்பானது என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிஅறிவித்தல்சட்டத்திற்குமுற்றிலும் முரணானது எனவும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில் நீதிமன்றம் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முஸ்லிம்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வந்திருக்கும் இஸ்ரேலியர்கள் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் முஸ்லிம் மக்களை கோபமூட்டும் வகையில் காஸாவில் இடம்பெற்றுவரும் இன அழிப்பு தொடர்பான சித்திரங்களை மதில்களில் வரைந்நிருக்கின்றனர்.

அதேபோன்று போரில் கொள்ளப்பட்ட இஸ்ரேல் இராணுவ வீரர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரின் படம் பொறிக்கப்பட்ட சுவராரொட்டிகளும் திருகோணமலை மாவட்டத்தில் சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முஸ்லிம்களின் பள்ளிவாசல் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் வரையான தூரத்தில் ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்களை யார் செய்கிறார்கள் என்பதை ஆளும்தரப்புத் தேடிப்பார்க்கவேண்டும்.

காஸாவில் இடம்பெறும் இஸ்ரேல் இராணுவத்தின் இன அழிப்புக்கு எதிராக இலங்கையில் ஆட்சியில் இருந்த அனைத்து தரப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பலஸ்தீனுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்து வந்திருக்கின்றன.

சுற்றுலா விசாவில் வருபவர்கள் எவ்வாறு மதில்களில் சித்திரம் வரையவும் சுவரொட்டிகளை ஒட்டவும் முடியும்? எமக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அந்தப் பிரதேசத்தில் தங்கி இருக்கும் இஸ்ரேல் இனவாதப் பிரிவினரே இதனைச் செய்துள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலியர்கள் நாட்டுக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு கட்டடங்கள் இருக்கின்றன. பொலிஸ்பேச்சாளரும் இதனைத் தெரிவித்திருந்தார். சுற்றுலா விசாவில் வந்து எவ்வாறு வியாபாரம் செய்ய முடியும்?

வியாபாரம் செய்வதாக இருந்தால் அதற்கு ஆளும்தரப்பின் முழு அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று யூதர்களுக்கான மத வழிபாட்டு தலங்களும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றனர். தெஹிவளை அல்விஸ் பிரதேசத்தில் யூத மத வழிபாட்டு இடமொன்று நிர்மாணிக்கப்படுகிறது. எவ்வாறு இதற்கு இடமளிக்க முடியும்?

யூத வழிபாட்டு நிலையம் தெஹிவலை, வெளிகமை, அறுகம்பே போன்ற இடங்களிலும் நிர்மாணிக்கப்படுகின்றன. அந்த வழிபாட்டு நிலையங்களுக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதனால் முஸ்லிம் பகுதிகளில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலியர்களை இலக்குவைத்துதாக்குதல்இடம்பெறப்போவதாக தெரிவிக்கப்படும்தகவல்தொடர்பிலும்சந்தேகம் எழுகிறது. நாடுக்குள் இஸ்ரேலியர்களின் நடவடிக்கை சந்தேகத்திற்கிடமான வகையில் சில காலமாகவே இருந்து வருகிறது.

அதேபோன்று அண்மையில் சுற்றுலாப் பயணிகள் என இஸ்ரேலியர்கள் 20ஆயிரம் பேர்வரை இலங்கைக்கு வந்தனர். அவர்களில் இஸ்ரேல் இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர். ஏனெனில் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் போர் நடத்துவதில்லை. அங்கு இன அழிப்பையே அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

போர் இடம்பெறுமாக இருந்தால் இராணுவத்திருக்கிடையிலேயே மோதல் இடம்பெறவேண்டும். ஆனால் காஸாவில் 10 நிமிடங்களுக்கு ஒரு சிறுவன் கொலை செய்யப்படுகிறான். இவ்வாறு இனப்படுகொலை செய்யும் இஸ்ரேல் இராணுவத்தினர் மன அழுத்தங்களுக்கு ஆளாகக்கூடாது என்பதற்காகவே குறிப்பிட்ட காலத்துக்கு பினனர் அவர்களை இவ்வாறு சுற்றுலாவுக்கு அனுப்பி, அவர்களின் மன அழுத்தத்தை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இன அழிப்பை மேற்கொண்டுவரும் இஸ்ரேல் இராணுவத்தினர் மன அழுத்தத்தில் இருந்து மீள இலங்கையின் வளங்களை பயன்படுத்துகிறதா என்பது தொடர்பாகவும் இஸ்ரேலியர்களால் நாட்டுக்குள் நிர்மாணிக்கப்படும் சட்டவிராதே கட்டடங்கள் மற்றும் அவர்களின் மதவழிபாட்டு தலங்களுக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது தொடர்பிலும் தற்போதுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இதற்கு முன்னர் இருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் தெளிவுபடுத்தவேண்டும். பொலிஸ்மா அதிபரும் விளக்கமளிக்க வேண்டும்.

இஸ்ரேலியர்களின் இந்த நடவடிக்கையால் எமது சுற்றுலா துறை பாதிக்கப்படும் ஆபத்து இருப்பதுடன் நாட்டுக்குள் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் அபாயம் இருக்கிறது. அதனால் ஆளும்தரப்பு இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# நாகர்கோவில் – எழுதுமட்டுவாழ் பிரதான பாலத்தில் 65 ஆண்டுகளுக்கு பின்னர் புனரமைப்புப் பணிகள்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழ் பிரதேசத்துக்கு செல்கின்ற வீதியிலுள்ள பிரதான பாலத்தை புனரமைக்கும் பணியை வட மாகாண ஆளுநர் வேதநாயகம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பித்துவைத்தார்.

நாகர்கோவில் – எழுதுமட்டுவாழ் பிரதான பாலம் 1959 ஆம் ஆண்டில் ஒரு நீர்ப்போக்கு பாலமாக அமைக்கப்பட்டிருந்தது. இதனால் மாரிகாலம் தொடங்கி முடிவடைந்த பின்னர் சில மாதங்களாக இந்த பாதையில் நீர் நிரம்பி நிற்பதால் இப்பாலம் பயன்படுத்த முடியாத நிலையில் இதுவரை காணப்பட்டது.

அண்மைய காலமாக பல தடவைகள் நிதி ஒதுக்கப்பட்டும் வன ஜீவராஜிகள் திணைக்களம் அது தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்று கூறி பல வருடங்களாக இந்த பாலத்தை அமைக்க, தடைகளை ஏற்படுத்தி வந்தது.

இதனால் சுமார் மூன்று ஆண்டுகளாக இப்பாலத்தை புனரமைக்கும் பணிகள் தடைப்பட்டு வந்தன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி மற்றும் நாகர்கோவில் மக்கள் மேற்கொண்ட தொடர் அழுத்தங்கள், முயற்சிகளால் இப்பாலத்தை புனரமைப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் இணங்கியது.

இதனையடுத்து, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தியின் ஏற்பாட்டில் வட மாகாண ஆளுநர் வேதநாயகத்தால் இப்பாலம் புனரமைப்புப் பணிகள் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வீதியை பயன்படுத்த முடியாத காரணத்தால் சுமார் 7 கிலோமீற்றர் தூரத்திலுள்ள எழுதுமட்டுவாழ் சந்திக்கு செல்வதற்கு மருதங்கேணி, புதுக்காடு ஊடாக சுமார் 40 கிலோமீற்றர் தூரம் சுற்றி மக்கள் பயணித்துக்கொண்டிருந்தனர்.

இப்புனரமைப்பு பணி ஆரம்ப செயற்பாட்டின்போது வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, பகுதி கிராம சேவையாளர், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், துறைசார் பொறியியலாளர்கள், கிராம மக்கள் என பலர் இணைந்திருந்தனர். (05)

# உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மாத்தளையில் இருவர் கைது

மாத்தளை, கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹயாய பகுதியில் 02 உள்நாட்டுத் துப்பாக்கி களுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை கலேவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலேவெல பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மாத்தளை, வஹகோட்டை பிரதேசத்தை சேர்ந்த 40 மற்றும் 53 வயதுடையவர்கள் ஆவர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மதுபானம் மற்றும் கோடாவுடன் வாதுவையில் ஒருவர் கைது

*களுத்துறை, வாதுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொத்துப்பிட்டிய பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் இளைஞன் ஒருவன் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.*

*வாதுவை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*வாதுவை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 31 லீற்றர் (41 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் மற்றும் 1,950 லீற்றர் (12 பீப்பாய்கள்) கோடா என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

# கொட்டாவையில் திடீரென தீப்பற்றி எரிந்த வாகனம்

கொட்டாவை – மஹரகம வீதியில் கொட்டாவை பிரதேசத்தில் வான் ஒன்று திடீரென தீ பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வானில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்விபத்தின்போது வானில் மூன்று பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.கொட்டாவை மாநகர சபையின் தீயணைப்பு படையினரால் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2024இல் வெளியிடப்பெற்றது